176

"முல்லை"

176

முதல் வெளியீடு

21 JAN 1946

4

76927

T.K.S. சகோதரர்களின் நாடகம்.

" சீரியநற் கொள்கையினை எடுத்துக்காட்ட
சினிமாக்கள் நாடகங்கள்
நடத்த வேண்டும் "

இது நமது புரட்சிக் கவிஞர் வாக்கு

கவிஞரின் இக்கருத்தைக் குறிக்கோளாகக்கொண்டு
தொண்டாற்றி வருகிறார்கள்

ஸ்ரீ பால ஷண்முகாநந்த சபையார்

திருச்சியில்

நாடகங்கள் நடைபெறுகின்றன

அடுத்த முகாம்

கோவை

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

—பாரதிதாசன்

முல்லை

முதல் வெளியீடு

ஆதரவாளர்:
கவியரசர் பாரதிதாசன் அவர்கள்

★

— விலை அணா நான்கு —

★

59, பிராட்வே-சென்னை

முல்லை கூறுகிறது

இது 'முல்லை'யின் முதல் முறுவல். தமிழ் மக்களின் புகழ் கொழிக்கும் பொங்கல் நாளில் வருகிறது. 'முல்லை'யின் மணம் தமிழின்பமே. தமிழின்பமே முல்லை'யின் குறிக்கோள். 'முல்லை'யில் சிறப்பாக நம் கவியரசர் அவர்களின் கவிதைகளும், அவர்களைப் பற்றிய கருத்துரைகளும் முகிழ்த்து மலர்ந்து மணம் தரும். தமிழ் நாட்டின் தனிப்பெருங் கவியரசர் பாரதிதாசன் அவர்களின் கருத்தில் அரும்பி, அறிஞர்களின் அருந்துணையால் முகிழ்த்து, என் செயலால் மலர்ந்தது இந்த 'முல்லை'! தமிழ்ப் பெருமக்கள் முயற்சிக்குத் துணைபுரிவார்களாக. 'முல்லை'யின் ஆதரவாளர்—அன்பர்கட்கு, வணக்கம்—நன்றி. தமிழ் ஆக்கம் ஒன்றே, முல்லை'யின் நோக்கம். அரசியற் சூழ்ச்சி, சமயவாதம் இவற்றிற்கு இடம் இல்லை. இயன்றவரை தமிழையே கையாளுவது. பொருட்செறிவும் கருத்து நயமும் இருப்பின், பிற சொற்களில் பகைமை இல்லை. எண்ணத்தில், கருத்தில், சொல்லில், செயலில் தமிழாட்சி நிலைபெறக் காணவேண்டும். கட்டுரைகள் தந்த அறிஞர்கட்கு எம் நன்றி. மிகக் குறுகிய கால அளவிற்குள் கொண்டுவரப் பெற்றது இந்த முல்லை. அடுத்தமலர் இதனினும் நறுமணத்தைத் தரும் என்பதைச் சொல்ல வேண்டுமா?

இந்த மலர் உருப்பெற்று வெளிவரப் பெரிதும் துணையாயிருந்த இரு பெரும் நண்பர்களான முருகு - சுப்பிரமணியம் — கண - இராமநாதன் இருவருக்கும் நன்றி!

— ப. முத்தையா
தொகுப்பாளர்

மலர்ந்தது முல்லை!

பச்சைப் பசுந்தழைக் காட்டினிலே ஒரு
பக்கத்தில் பூத்திட்ட முல்லையைப் பார்
அச்சடையாளம் நல் வான்குளத்தில் மின்னும்
ஆயிரம் மீனெனத் தோன்றுமடி!
அச்சில் அடித்திட்ட வெள்ளிப்பணம் கையில்
அள்ளி இறைத்தது போல் இருக்கும்!
இச்சை நறுமணத் தால் அழைக்கும்—முல்லை
ஏன் என்று பார்க்கையி லேசிரிக்கும்

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இசைக்கலை

இக்கால உலகைப் பண்படுத்தப் பலதிற முயற்சிகள் எழுகின்றன. அம் முயற்சிகளுள் இசைக் கலைக்கு ஆக்கந் தேடுவது தலையாயதாயிருத்தல் வேண்டும். இல்லையேல் விளையத் தக்க பயன் விளையாது.

தமிழ் இனிமை; இசையும் இனிமை. இரண்டினினிமையும் ஒன்றுபட்டால் எத்தகைய இன்பம் சுரக்கும்! தமிழிசையின் மாண்பு என்னே! என்னே! தமிழ்த் திருவே திரு.

தமிழிசை தொன்மை வாய்ந்தது; மிகத் தொன்மை வாய்ந்தது. அவ்விசை எந்நாளில் தோன்றியது — வளர்ந்தது—முதிர்ந்தது என்று அறுதியிட்டுக்கூற இயலவில்லை. அது சரித்திரக் காலத்தையும் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்த காலத்தில், தமிழ்நாட்டவர் இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல படக் கிடக்கின்றன. 'தமிழ்நாடே ஓர் இசை நிலையம்' என்று சுருங்கச்சொல்லலாம்.

தமிழ்நாடு கலைக்கூடமாய்ப் பொலிந்த காலமும் உண்டு; இது பண்டைப் பெருமை. தமிழ் நாடு இந்நாளில் உற்றுள்ள நிலையை விவரித்துக் கூற நாவெழவில்லை. பிற்காலத் தமிழ்நாடு பல கலைகளை இழந்தது; இசைக்கலைகளில் பல கூறுகளை இழந்தது; பொல்லாவிலங்குகளையும் வயப்படுத்தவல்ல யாழை இழந்தது. பலப் பல இழவுகளை நினைக்க நினைக்க அழுகை பெருகும்.

இங்கே அழுகை எற்றுக்கு? தமிழ்நாடு தனது பெரும் செல்வங்களை இழந்துவிட்டது. இது பிற்காலத் தமிழ் மக்களின் கவலை ஈனத்தால் விளைந்தது.

ஓவிய உணர்வு பெற்ற இசை ஞானியர்க்கும், அவ்வுணர்வு பெறாத இசைஞர்க்கும் வேற்றுமை உண்டு. அவ்வேற்றுமையை எப்படி உணர்வது? அடைவால் உணரலாம். முன்னவர் உடையின்றி நிர்வாணியாய் ஆடினும் பாடினும் மனிதர் உள்ளத்திலே தீய எண்ணம் எழாது; அமைதி இன்பமே நிலவும். பின்னவர் நல்லாடை புனைந்து ஒப்பனை செய்து ஆடினும் பாடினும் தீய எண்ணம் ஆர்க்கும்; அமைதி தலைகாட்டவும் அஞ்சும். இசையின் நோக்கம் மனிதனிடத்தில் சாந்த சீலத்தை முகிழ்விப்பதாயிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு விருந்தோம்புவதில் பேர் பெற்றது. எவ்வகைத் துறைகளிலும் அது விருந்தோம்பியுள்ளது. கீர்த்தனை விருந்தையும் ஓம்பியது. கீர்த்தனையால்நாட்டுக்கு விளைந்தநலன்சிறிது; தீங்கோ பெரிது. இதனைத் தமிழ் இசைச் சங்கம் உணர்ந்திருக்குமென்று நம்புகிறேன். இசைவழியே தமிழ்ப் பாக்களைப் போதிப்பது மரபு.

இம்மரபு இதுகாலை வீழ்ந்துபட்டு வருகிறது. மரபைக்காக்க வேண்டுவது தமிழ் ஆசிரியன்மார் கடமை. இக்காலத் தமிழ் ஆசிரியன்மார் சிலர் பாக்களைப்பாடி உரை கூற நாணுகின்றனர். சிலர் தமக்கு இசைஞானம் இல்லையே என்று வருந்துகின்றனர். நாணமும் வருத்தமும் மரபை அழிக்குமே! பின்னே கண்ணீர் உகுப்பதால் என்ன பயன்?

தமிழ் வாழ்க! தமிழிசை வெல்க!

—திரு. வி. க.

மக்கட்கு அன்பன்

அன்றொருநாள் அயலூரில் அரங்கன் கண்டான்
அறையினிலே ஒருருவம் எழுதுங் காட்சி;
நின்றபடி நின்றிட்டான், நிலாவும் வீசும்;
நிழலுருவம்போற்றிகழும்நீடுருவம் எழுதும்;
குன்றனைய குணவுயரக் குமரன் நடந்தான்,
குறுகியவண் அவ்வுருவைக் "கூறிடுக"
[என்றான்;
பொன்றாத அவ்வுருவும் "போற்றிக் கேட்க
புங்கவன்பால் அன்புள்ள பேரின் பேரை"
எனக்கூற, ஆங்கவனும் "என்பேர் உண்டோ
எடுத்துரைக்க" எனக்கேட்க உருவம்பேசும்;
"உன்பேர்தான் ஈங்கில்லை என்செய் வேன்யான்"
உளமுடைந்துந் தளராதே அரங்கன்
[உரைப்பான்:
"நனவோதான் கனவோதான் என்றாலும் எழுது
நானிங்கே இனத்தார்க்கு மக்கட்கு அன்பன்"
என, ஆங்கே அவ்வண்ணம் எழுதியே சென்ற
எழிலுருவம் அவன் பெயரை முன்வைத்த
[தாமே.

— டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.

இது லே ஹண்டு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய ''அபோ பென் ஆடெம்'' என்ற கவியைத் தழுவியது.

மகிழ்ச்சியின் எல்லை

பண்டைக்காலத்தில் மக்கள் எல்லாரும் இன்ப மாய் வாழக்காரணமாக இருந்தது மழையே. மழைவளம் சுருங்கின் துன்பம் பெருகுத லும், மழைவளம் பெருகின் இன்பம் பெருகு தலும் அக்காலத்து இயல்பு. அதனாலேயே, திரு வள்ளுவர் வான்சிறப்பில் மழையைப் போற்றி னார். ஆனால் இக்காலத்தில் மழைவளம் குன்றாது விளைவு பெருகியபோதும் உப்பில்லாக் கஞ்சி உண்டு உயிர்வாழும் வறியவர்கள் மிகுந்துள்ள னர். இதன் காரணம் என்ன? இயற்கை நல்கும் மழைவளத்தினையும் சிலரே பயன்படுத்திக்கொ ண்டு பலரை வருத்துவதே ஆகும்.

ஒருவர் உற்ற பெருமகிழ்ச்சியைக் கூற விரும்பும் போது, 'புதையல் பெற்றதுபோல் மகிழ்ந்தேன்' என்பது உண்டு. வெள்ளிக்காசும், பொற்காசும் நாடி மக்கள் அலையும் காலம்இது. அந்தக்காசு இல்லையானால் மழையாலும் பயன்காணமுடியா தவாறு உலகம் இப்போது அமைந்துள்ளது. ஆதலின், எதிர்பாராது திடீரெனக் கிடைக்கும் பெருநிதி–புதையல் அளவற்ற மகிழ்ச்சி தருவ தாகக் கருதி உவமையாகக் கூறுகின்றனர். பழந் தமிழ்நாட்டில் பண்டமாற்று நிலவியது. அக்கா லத்தார் விளைபொருள்வளத்தையே போற்றினர். விளைபொருள் பெருக உதவும் மழைவளமே அவர்கள் போற்றுதலுக்கு உரியதாக இருந்தது. நெடுங்காலம் மழையேஇல்லாமல் பஞ்சம்பரவிப் பட்டினி பெருகிய காலத்தில் அவர்கள் வேண் டியதெல்லாம் மழையே. துன்பம் அடியோடு தொலையுமாறு பெய்த பெருமழையைக் கண்டு களித்துக் கூத்தாடுதல் அவர்களுக்கு இயல்பே. அந்த மழையே அவர்களுக்குப் பேரின்பம்.

ஒருநாடு நெடுங்காலம் மழை இல்லாமல் வாடி வறண்டுபோயிற்று. உழவர்களின் வீடுகளில் கலப்பைகள் எடுப்பார் இல்லாமல் உறங்கிக் கிடந்தன. மழைக்குக் காலமே இல்லாமல், எல்லாம் கோடைக்காலமாகவே மாறிவிட்டது. தரையில் பசுமை என்பதே இல்லாதுபோய் விட்டது. பெரிய ஏரிகள் வற்றாத நீர்நிலைகளாய்ப் பலகாணி நன்செய் நிலத்திற்குப் பயன்பட்டு வந்திருந்தன. அந்த ஏரிகளும் நீர்வற்றி வறண்டன. அவற்றின் கரைகள் குன்றுகள் போல் காட்சி அளித்தன. மீனும் பிறவும் தேடிப் பறவைகள் அவற்றினிடம் வருதல் ஒழிந்தது. ஏரிகளினுள்ளே கதிரவன் வெம்மை தவிர வேறு ஒன்றும் இல்லையாயிற்று. ஆனால், திடீரென ஒருநாள் நள்ளிரவில் பெருமழை பொழிந்தது; பொழிந்துவிட்டது. விடியற்காலையில் மக்கள் எழுந்தபோது கண்ட இடமெல்லாம் வெள்ளக் காடாய்க் கண்டனர். ஏரிகள் எல்லாம் நீர் நிறைந்து பொலிவாக விளங்கின. அப்போது அம்மக்கள்உற்ற உவகையினை இவ்வளவு என்று எடுத்து உரைக்க முடியுமோ? மகிழ்ச்சியின் எல்லையில் நின்று இன்பக் கூத்து ஆடியிருப்பார்கள் அல்லரோ?

இந்தப் பெருமகிழ்ச்சி எல்லாரும் நன்கு உணர வல்லது. கபிலர் என்னும் புலவர் இதனை உவமையாக ஒரு பாட்டில் அமைத்தார்.

ஒரு திருமணம் நிறைவேற வேண்டும் என்று நெடுநாளாகப் பெரு முயற்சி செய்யப்பட்டு வந்தது. பல இடர்ப்பாடுகளுக்கும் இடையே விடாமுயற்சி செய்து பெருங்கவலை கொண்டிருந்தவள் ஒருத்தி. அவள்தான் மணமகளுக்கு உயிர்த்துணையாக இருந்து உதவிவந்த தோழி. பல

நாள் கொண்ட கவலையெல்லாம் ஒருநாள் தீர்ந்தது. மணமகன் வீட்டார் பெண்கேட்க வந்தனர்; நாள் குறித்தனர்; திருமண ஏற்பாடு செய்தனர். அப்போது அளவு காணு மகிழ்ச்சி அடைந்தவள் அந்தத்தோழியே. அவள் தன் மகிழ்ச்சியைத் தன்னுள் வைத்திருக்க முடியாமல் பொங்கிக் களித்தாள். மணமகளிடம் சென்ருள்; தன் களிப்பை எடுத்துரைத்தாள்:—

“தோழி! யான் பெற்ற பெருமகிழ்ச்சியை என்ன என்று சொல்வேன்? நாடெல்லாம் பசுமையற்று வறண்ட அந்தக் காலத்தில், ஏரியெல்லாம் நீரற்றுக்கிடந்த அந்தநாளில், அன்று ஓர் இரவு பெய்த பெருமழை நினைவு இருக்கிறதா? அன்று விடியற் காலையில் நம் ஊரார் எல்லாரும் ஒரே ஆரவாரமாக மகிழ்ந்து துள்ளினர்கள் அல்லரோ? அவர்கள் எல்லோருடைய மனமகிழ்ச்சியும் ஒன்ருகத் திரண்டு என் ஒருமனத்தில் குடிகொண்டது போல் இருக்கின்றது என்ருள். அந்தப் பாட்டு:—

“ நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பை(து)அறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யாவையும்
சென்றுசேக் கல்லாப் புள்ள, உள்இல்
என்றாழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே.”

—அகநானூறு-42.

(நாஞ்சில்-கலப்பை. பைது-பசுமை. கோட்ட-கரைஉடையவை. என்றாழ்-சூரியன் வெப்பம்.)

—பேராசிரியர் மு. வரதராசனர்

சரயு நதிக்கரையில்

பொன் கொழித்துக் காவிரி புனல் பாயும் சோழ நாட்டை நினைத்தால் கலைமாடம் இரண்டு நம் கண்முன் வருகின்றன. ஒன்று இராஜராஜ சோழன் பெரும்புகழ் பரப்பும் பெருங்கலைக் கோயில்; மற்றொன்று தமிழன்னை வீற்றிருக்கும் தஞ்சைக்கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துவிழா: தமிழன்பில் முதிர்ந்த திரளான அறிஞர்களின் கூட்டம்: செவிக்கும் சிந்தைக்கும் நல்விருந்து. யாண்டும் தமிழ் மணம். இன்ன கூட்டத்திடையே பொன்னுடலம் தாங்கிப் புன்முறுவல் பூத்த இனிய முகத்தினராய்க் கைகூப்பிய தோற்றத்தோடு அதோ வருகிறுரே அவர்தான் உமாமகேசுவரர்.

தஞ்சை ஜில்லாக்காரர்கள்—இல்லை, தமிழ் நாட்டவர் இந்தப்பெயரை நன்கறிவார்கள். இதற்கவர்கள் கூறும்பொருள்—தமிழாக்கம் என்பதாகும்.

'இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்' என்ற எண்ணத்தோடு நெடுநாள் வாழ்ந்து நிலையான தொண்டு செய்ய நினைத்தாரிவர். வாழ்வு எல்லையுடையதாய்த்தொண்டு எல்லையற்றதாய் முடிந்தது. தாசில்தாரின் முதல்மகனுய்ப்பிறந்து தஞ்சை வளநாட்டின் தலைவரான உமாமகேசுவரர் விரும்பினுல் அண்ணுமலைப்பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராகவோ சென்னை அறநிலையக் கண்காணிப்பாளராகவோ ஆகியிருக்கலாம். தம் சங்கத்து வாயிலாகச் செய்யும் தமிழ்த் தொண்டிற்கு இவை தடையாகும் என்ற எண்ணமே பிறர் விருப்பத்தையும் தகர்த்தது.

தஞ்சைக்கரந்தையில் இரவொருபொழுது இவர் தம் இல்லத்தில் நானிருந்தேன். காலையில் வந்து சென்ற கட்சிக்காரர், ஒருபெரிய மிராசுதார் வந்து அமர்ந்தார். பொறாமை, பூசல் காரணமாக பொய்யான ஒரு வழக்கை அவர் கொண்டு வந்தார். அறமன்றத்தில் வழக்கு நடப்பது போல் இவர்முன்னிலையில் பலவிபரங்கள் கூறப்பட்டன. ஊன்றிக்கேட்டுக்கொண்டிருந்த உமாமகேசுவரர் 'வருந்துகிறேன். நான் இதை ஏற்று வழக்காட முடியாது. சுருக்கமாய், ஆனால் பெருமிதமாய்ச் சொன்னார்.'வருந்துகிறேன் வழக்காடமுடியாது.' என்ற சொற்களை வந்தவரோ அருகிருந்த நானோ கற்பனையில்கூட நினைக்கமுடியவில்லை. மிராசுதார் வெளியேறினார். உமாமகேசுவரர் உள்ளத்திலிருந்து வழக்கின் உண்மை வடிவம் வெளியே வந்தது. நூற்றுக்கு நூறு பொய் பேசியும், பேசுவித்தும் இயங்கும் ஒரு தொழிலில் இப்படியும் ஒருவர் இருந்தார் என்பதை நம்புதற்கே நமக்கு மிகுந்த தைரியம் வேண்டும். இதனாலே தான் தஞ்சை நீதிபதிகள் இவரை மிகச்சிறந்த வாய்மையாளர் என நினைத்து மிக மதித்தனர்.

தமிழைத் தூய வடிவத்தில் காண நினைக்க எண்ணம் தனித்தமிழ் இயக்கமாக உருக்கொண்டது. இதை மொழிப்புரட்சி என்றே கூறலாம். இவ்வியக்கம் இவர் சொல்லால், எழுத்தால், முயற்சியால் வீறு பெற்று வளர்வதாயிற்று. இத்துணைத் தனித்தமிழ்ப்பற்றுடைய இவருக்கு ஏனோ? உமாமகேசுவரர் என்ற வடமொழிப்பெயர் வழங்குகிறதுஎன நினைத்தேன். பெற்றோரும், உரிமையுடைய பிறருமே பெயரிடுதல் மரபு. பெற்றோரிட்டபெயராயினும் பிறர் ஏன் இதைச்சிந்திக்கவில்லைஎன்று நினைத்தபோது தனித்தமிழ்ப் பற்றுடையஇவரை வடமொழிப்பெயரால்அழைப்பது

முரண் எனக்கருதி மேதக்க சான்றோராகிய மெய்ஞ்ஞானியார் 'செந்தமிழ்ப்புரலவர்' 'தமிழ வேள்'என்னும் தனித்தமிழ்ப்பெயர்களை ஒன்றுக்கிரண்டாய் வழங்கி வாழ்த்துவாராயினர்.

தமிழ்நாட்டில் ஒலியும் எதிரொலியுமாய்த்தோன்றிய மொழிப்போராட்டத்தில் முன்னின்று தமிழ்க்கொடி ஏந்தி நாடெலாம் தமிழ் முழக்கம் செய்ததையும் சென்னை, அண்ணாமலைப்பல்கலைக் கழகங்களில் தமிழாக்கம் பற்றிச்செய்த செயற்கரியதொண்டுகளையும், ஐயாற்றிலும், கரந்தையிலும்தமிழுக்கு அருங்கல்லூரி கண்ட சால்பினையும் யாரே மறக்கவல்லார்!

கரந்தைக் கல்லூரியைக் கலைக் கழகமாக்க நினைத்து கல்கத்தாவில் ஆசுத்தோசு முகர்ஜி, கவியரசர் இரவீந்திரர் இவர்தம் திருப்பணிகளை நேரிடைக்கண்டு அதைத்தம் பணிக்கு நலனுக்க விரும்பினர். இவ்விருப்பமே 1941ம் ஆண்டு கோடை விடுமுறையில் இவரை வடநாடு செலலத்தூண்டியது. கல்கத்தாவிலும் பிற இடங்களிலுமுள்ள தமிழன்பர்கள் இவரை வரவேற்றனர். பிரயாகையிலிருந்து அரித்துவாரம் செல்லும் வழியில் பைசாபாத் என்னும் நகரில் மேத்திங்கள் ஒன்பதாம் நாள் வெப்பு நோயால் பிணிக்கப்பெற்று குறிஷி மருத்துவ விடுதியில் தன்னேரில்லாத்தமிழவேளின் நல்லுயிர்பிரிவதாயிற்று.'ஊனிலாவி உயிர்க்கும்பொழுதெலாம் உமாமகேசனார் உள்ளம் தமிழொடு ஒன்றி நின்றது' என்று உறுதியாகச் சொல்லலாம். கேட்டார்க்கெல்லாம் இவர் பிரிவு பெருந் துயராயிற்று.

தனித் தமிழின் தூய்மை, இனிமை, வன்மையிளிரும் கட்டுரைகளையும், செல்வம், பதவி, ஆணை இவை தமிழாக்கத்திற்குப் புறம்பாகும்

நிலையில் அஞ்சாது கூறிய வீரவுரைகளையும் இனிக் காண்பதும் கேட்பதும் எந்நாள்?- என நினைத்துத் தமிழ்நாடு ஏங்குகிறது.

பொன்னிற மனைய சிவந்தமேனி; அந்நிறத்தைக் கொண்டு ஒளிகாலும் தலை; நீண்டு படர்ந்த நீறு தோய்ந்த நெற்றி; அருளொழுகு கண்கள்; இளமைதொட்டு எடுக்கப்படாச் சிறு காதணி கருமையும் ஓரளவு வெண்மையுமாய் மயிர டர்ந்த மீசை; பெருமிதப் பார்வை; ஏறனைய நடை; இனிக்கப் பேசும் கனிந்த சொற்கள்; இவை நினைக்க நீர்மல்கும் என் கண்கள்.

இவர் எண்ணத்தில் நாளும் நின்றவை இரண்டு; அவை தமிழும் சைவமும். இவரை அறியாதன சோம்பலும் பொய்யாமையும்.

இவர் தம் வாழ்வில் உணரக் கிடக்கும் நுட்பங் கள் மிகப் பல. அஞ்சாமை, அடக்கம், அருள், எளிமை, ஊக்கம், விடாமுயற்சி ஆகிய இப் பண்புகள் இவர் தம் வாழ்வின் நாண்மலர்களா கப் பூத்து பெரும் பயன் தந்தன. செய்நன்றி, அறிதல், கடனறிந்து ஒழுகல், நலனறிந்து ஈதல் இவர்பால் யான் கண்டன.

தமிழ்த்தாய் தனியரசு செலுத்த வேண்டுமானல் ஜில்லாவுக்கு ஒரு உமாமகேசுவரர் வேண்டும் என்றனர் அருள்கனிந்தஞானியாரடிகள். அவரை யும், அவர்குறித்த ஒருவரையும் காலவெள்ளம் கவர்ந்தது. கொண்டுசென்ற காலம் இவரனைய மெய்வீரரைக் கொண்டுதரும் என்ற எண்ணம் உணர்வு கொள்ளச்செய்கிறது. அயோத்தியிலே சரயு நதிக்கரையிலே தமிழவேளின் பொன்னுட லம் தீக்கிரையாயிற்று. புகழுடம்பில் நிற்கும் தமிழவேளைத் தமிழர் என்றும் மறவார்.

— **வித்துவான் விசு. திருநாவுக்கரசு**

வாழிய முல்லை

தமிழ்நாட்டில், தமிழர் வாழ்வில், தமிழ் இலக்கியத்தில் முல்லை ஓர் உயரிய நிலையை அடைந்திருக்கிறது. சங்க நூல்களில் முல்லையை எங்கும் காணலாம். தேவாரத்தில் முல்லை பெரிதும் படர்நதிருக்கிறது. சங்க நூல்களில் முல்லைப் பாட்டு என்பதே ஒரு நூலுக்குப் பெயர். தமிழ் நாட்டு நானிலத்தில் ஒரு பகுதிக்கு முல்லை யென்று பெயர்.

முல்லையைக் கற்புக்குரிய சின்னமாகப் பழந் தமிழ் மக்கள் கொண்டுள்ளார்கள்.

'அவரோ வாரார், முல்லையும் பூத்தன' என்று ஒரு கற்புடைய மங்கை வேற்றூர் சென்ற கணவன் வராமை நோக்கி, வருந்துகிறுள். இந்த ஓரடியில் எவ்வளவோ ஆழ்ந்த பொருள் அடங்கி யிருக்கிறது.

செல்வம் மல்கும் செண்பகம்வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும் பீனும் குற்ருலம்

என்பது தேவாரம். செழித்தோங்கி நிற்கும் செண்பகம், வேங்கை மரங்கள்மீது முல்லைக் கொடி ஏறிப்படர்ந்து அரும்புகள் விடும் குற்ருலம் என்று திருக்குற்ருலத்தைத் திருஞான சம்பந்தர் போற்றுகிருர்.

கற்புக்குரிய முல்லையை நமது முற்கால மகளிர் பெரிதும் போற்றி வந்தார்கள். முல்லையங் கோதை நல்லார்களாய் நமது மாதர்கள் விளங்கினுர்கள். ஆனுல் இன்று முல்லையைப் போற்றுவோர் அருகி வருகின்றனர். மணமும் குணமு

மற்ற கனகாம்பரத்தின்மீது இன்று நாகரிக மகளிரின் காதல் சென்றிருக்கிறது. மணமுள்ள முல்லை, மல்லிகை முதலிய மலர்களுக்கு நோய்க் கிருமிகளை அழிக்கும் குணம் உண்டு. மணமற்ற மலர்களுக்கு அந்தக் குணம் இல்லையென்பதை நமது மாதர்கள் உணரவேண்டும்.

வீடுதோறும் முல்லை வளர்க்கும் வழக்கம் அந்நாளில் இருந்தது. "அல்லியங் கோதை நல்லார் அன்பொடு வளர்த்த முல்லை, மெல்லரும்பு ஈன்ற தென்ன" விழாவும் கொண்டாடினார்கள். இந்த வழக்கத்தைத் தமிழ் மாதர்கள் திரும்பவும் கொள்ளவேண்டும்.

படர்ந்து வளர்ந்து சிறந்து வாழ்வதற்குரிய கொழுகொம்பின்றி வருந்திக் கொண்டிருந்த முல்லையைப்போல, இந்த நாட்டிலே பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் உண்ணச் சோறின்றி உடுத்தத் துணியின்றி வறுமையிலும் சிறுமையிலும் வருந்திக்கொண் டிருக்கிறார்கள். அந்நாளில் முல்லைக்குத் தேரளித்த பாரியைப்போல் இந்நாளில் இந்த நாட்டுச் செல்வர்கள் ஏழைகளுக்குத் தங்கள் பொருளை உதவி அவர்களை ஆதரிக்க வேண்டும். பாரியின் கருணையையும் கொடையையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இன்று தோன்றும் இந்தப் புதிய "முல்லை"யை ஆதரிக்கும் பாரிகள் பலர் தோன்றுவார்கள் என்பதிலும் இது சிறந்து வளர்ந்து அரும்பீன்று மணம் வீசி நின்று நிலவும் என்பதிலும் ஐயம் இல்லை.

வாழிய முல்லை!

76927

— பரலி. சு. நெல்லையப்பர்

[illegible]

கவிஞர் வாழ்க்கையில்!

இளமையிலேயே, புலமை வளம் பெற்றது கவிஞர் பாரதிதாசன் அவர்களிடத்தில். இதற்கு உதாரணம்: புதுச்சேரி அரசாங்கக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் தேர்வில் கவிஞர் தம் பதினெட்டாம் வயதில் புதுவையிலேயே முதன்மையாகத் தேறித் தம் புலமையைப் புலப்படுத்தினர்.

நம் கவிஞருக்கு, உடனே ஆசிரியப்பதவி அளித்து முதன் முதலில் காரைக்காலுக்கு அடுத்துள்ள நெரவை என்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் அமர்த்தினார்கள்.

முதல்நாள் கவிஞர் பள்ளிக்கூடத்திற்குச் செல்கிறார்! அந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் நம் 'கவிக்காளை'யைக் கண்டதும் "யார் இந்தப் புது மாணவன்?" என்று கவிஞரோடு சென்ற ஒரு நண்பரிடம் கேட்டனர்.

பள்ளியில் வகுப்பு ஆரம்பமாயிற்று.

பள்ளித் தலைவர், நம் கவிஞரை வகுப்புக்கு அழைத்துவந்து, "இவர்தான் உங்கள் புது ஆசிரியர்!" என்று அறிமுகப்படுத்தினர். அவ்வளவுதான் மாணவர்களின் நாணத்தைப் பார்க்க முடியவில்லை! ஏன்? ஆசிரியருக்கு வயது பதினெட்டு; மாணவர்களுக்கோ, பத்தொன்பது, இருபதுக்குமேலிருந்தது.

'முத்து"

மதிப்புரை

மதிப்பு என்ற வார்த்தைக்குப் பெறுமானம் அல்லது தகுதி என்ற பொருள் உண்டு. அதனடியாக உயர்வான தகுதிக்கு உரிய என்றபொருளும் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்தின்மூலம் இதைச் சற்று தெளிவாக்கிக் கொள்ளுவோம் "இந்த வீட்டுக்கு என்ன மதிப்புப்போடுகிருய்?" "இன்றைக்கு ராமன் வந்திருந்தபோது மதிப்பாக நடந்துகொண்டான்" இவ்விரண்டு வாக்கியங்களிலும் மதிப்பு தனித் தனி தொனிப்புப் பெறுவது போல, புத்தக உலகத்திலும் ஒரு பொருள் கொடுக்கப்படுகிறது. மதிப்பு என்ற வார்த்தை மதிப்புரை என்ற தொடரில் அமைந்து பத்திரிகைகளில் புதிது புதிதாகவெளிவரும்புத்தகங்களை வாசித்து பிறகு இவற்றைக்குறிப்பிட்டு இவற்றினடியில் எழுதப்படும் சில வாக்கியங்களுக்குத் தலைப்பாகக் கொடுக்கப்படுகிறது, புத்தகத்தைப் பொறுத்தவரை பத்திரிகைகளைத்தவிர அதனுடன் சம்பந்தப் படுகிறவர் மூவர். அவர்கள் முறையே, அதை எழுதுகிறவர், அச்சடிப்பவர், வாசிப்பவர் என்ற விலாசத்துக்குள் அடங்குகிறவர்களாகும். புத்தகத்தை எழுதுகிறவருக்குமதிப்புரை என்ருல் அதன் தகுதியை நிர்ணயமாகச் சொல்லும் ஒரு அங்கமாகஇருக்கவேண்டும்என்ற ஆசை இருக்கும்.புத்தகத்தை அச்சடிப்பவர் அது அப்புத்தகத்தைவாசிக்கிறவன் என்றிருக்கிருனே

அந்த ஜந்து தனது பார்வையைத் திறக்கும்படி செய்விக்கும் சாதனமாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார். மூன்றாவதான வாசகன் இருக்கிறானே, அவன் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பு; அப்புத்தகத்தைப் பற்றி எழுதப்படும் வாக்கியங்கள் வாசிக்கத் தகுந்தவையாக இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது இயல்பு; ஆனால் முக்கியமாக அவன் எதிர்பார்ப்பது ஒன்றுதான்; மதிப்புரை எழுதியவன் அப்புத்தகத்தைப் பற்றித் தான் கண்டுள்ள அபிப்பிராயத்தை வகிக்கிறானா, அல்லவா என்பதுதான். சார்பான அபிப்பிராயம் எழுதியவனாக இருந்தால், மதிப்புரை எழுதியவன் புலி; சிங்கக்குட்டி என்று முதுகில் தட்டிக்கொடுப்பான்; இல்லாவிட்டால், "அவனுக்கென்னடா தெரியும்? என்னமோ பேத்தரான்" என்று சொல்லி விட்டு விலகுவான். பத்திரிகையில் தொடர்பு கொண்டு புத்தகத்தைப் பற்றி எழுதுகிறவனுக்கோ, அது தனது பார்வைக்கு வந்துகொண்டிருக்கும் கோடானு கோடி 'கழுத்தறுப்புகளில்' ஒன்று; அவற்றின் விதியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவன் தானே என்பது தீர்மானம்.

தமிழில் இருக்கும் நிலையைக் கவனித்தாலோ, எழுதுகிறவர்களைக் கேட்டால், நம்முடைய இன்றைய சாதனையை மேல் நாட்டு இலக்கியங்களுடன் தைரியமாக ஒப்பிடலாம் என மார்தட்டுவார்கள். ஏன் மேல் நாட்டுடன்

அது ஒப்பிடவேண்டிய காரியமோ தெரியவில்லை. நம்மூர் நாயர் ஓட்டல் இட்டலியையும் பரமசிவம் பிள்ளை ஓட்டல் தோசையையும் ஹட்லின் பாமர்ஸ் பிஸ்கோத்துடன் வெற்றிகரமாக ஒப்பிட்டுவெளிவரும் கருத்துக்களைக்காணப்பெறும் பாக்கியம் எனக்கு இதுவரை சித்திக்கவில்லை— இலக்கியத்துக்குள் தான் இக்கோளாறு—புத்தகத்தின் முன்னுரை ஆசிரியரைத் தமிழ் நாட்டு பெர்னாட்ஷா என்று பறை சாற்றும்; புத்தகத்தை அச்சடித்தவர் மதிப்புரைக்காகப் புத்தகங்களை அனுப்பிவிட்டு "தமிழ்நாட்டில் இலக்யம் ஆரம்ப நிலையில் இருக்கிறது; கொஞ்சம் பார்த்துச் செய்யுங்கோ" என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு காரியாலயமாக ஏறி இறங்குவார்; இது தவறினால், சில பத்திரிகைகளிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு "மதிப்புரை" என்ற சில வாக்கியங்களையும் கொண்டுபோய் அனுப்பிப் பிரசுரிக்கச் செய்வார். இவ்வளவு நெளிவு சுளுவுகள் தெரியாத பிரசுரகர்த்தரானால், விதியின் பேரிலும் விளம்பரத்தின் பேரிலும் பாரத்தைப் போடுவார். இவைதான் இன்று மதிப்புரை என்ற வார்த்தையைச் சூழ்ந்து நிற்கும் ரசாபாசமான வாழ்த்துக்கள். ஆனால் உண்மையில் மதிப்புரை தான் என்ன? அது பொதுவாக இலக்கிய விசாரமான ஆராய்ச்சி அல்ல; ஒரு புதுப் புத்தகம் வந்திருக்கிறது, இது என்ன விஷயத்தைப் பற்றியது; இன்னமாதிரி எழுதப்பட்டிருக்கிறது என்பது கண்டிருந்தால்

போதும். ஆனல் இன்று வெளிவரும் புத்தகங் களில் சித்தவைத்தியம், சோதிடம், சிற்றின்பம் பற்றியவை தவிர மற்றவெல்லாம், தம்மை ஒரு இலக்கிய மைல்கல் என மார்தட்டிக்கொண்டு வருகின்றன. இப்படிப்பட்ட தொரு மயக்க நிலையைப் போக்கச் சற்று காரமான கருத்துக்கள் வெளியிடப்படுவது குற்றமல்ல. நல்ல இலக்கிய மென்ருல், எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத் துக் கொண்டாலும், இவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும். பனைமரத்தில் ஊசியைச் சொருகிக்கொண்டு சுமந்து நடந்த பர மார்த்த குருவின் சீடர்கள் போல, எத்தனை பேர் சுமந்து வந்தாலும், பரங்கிக்காய் குதிரை முட்டையாகி விடாது. மதிப்புரை எழுதுகிற வனிடம் எதிர்பார்க்க வேண்டியது ஒன்றுதான். நல்ல இலக்கியத்தைக் காணும் பொழுது அதைத் தெரிந்து கொள்ளவும், பரிச்சியம் செய்து வைக்கவும் அவனிடம் திராணி வேண் டும்; அப்படியே போலியைக் காணும்போது, யார் வந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் அது போலி என்று சொல்லுவதற்கு நெஞ்சு அழுத்தம் கொண்டிருக்க வேண்டும். இது போதும்.

—புதுமைப் பித்தன்

ஐந்து முத்தம்

பூங்கோதையும், பொன்முடியும் எதிர்பாராத வகையில் நேரிட்டுக் கொள்ளுகிருர்கள். உள்ளம் ஒன்றுபடுகிறது. "கையிரண்டும் மெய்யிறுக இதழ் நிலத்தில் கன உதட்டை ஊன்றிஞன் விதைத்தான் முத்தம்."

அவன், முத்தம் என்ற இன்பவிதையை அவளின் இதழாகிய நிலத்தில் விதைத்தாஞம். மற்ருெரு முறை இவர்கள் நேர்படுங்கால் "பூங்கொடியை மார்போடணைத்து மணற் கிழங்காய்க் கன்னத்தில் வேரோடு முத்தம் பறித்தான்" என்று கன்னமாகிய நிலத்திலிருந்து முத்தமாகிய கிழங்கை வேரோடு பறித்ததாகக் கூறிஞர் கவிஞர்.

இனி மற்ருெரு முத்தம் குறிக்கிருர்:

தலைவியின் தாய் காலையில் பால் கறக்கத் தொடங்கிஞள். வீட்டு நடையில் முத்தம் தொடங்குகிறது. "மாமி அவள் பால்கறந்து முடிக்க இங்கு மருமகனும் இச்சென்று முடித்தான் முத்தம்" என்று கூறுகிருர்.

அவன் உணர்ச்சியின் மிகுதியால் அந்த முத்தத்தை எப்போது துவக்கி எப்போது முடிக்கிருன் என்பது நோக்கத்தக்கது. இனி, அம் முத்தம் எப்படிப்பட்ட அணி பெறுகிறது எனில், அவன் இதழ் அவள் கன்னத்தில் "தாமரை போய்ச் சந்தனத்தில் புதைந்ததுபோலும்" என்

கிருர். எப்படிப்பட்ட கன்னம்? தமிழ்ச்சுவடிக் கன்னம். சுவடியாயின் உணர்வு செலுத்தப்பட வேண்டும். அவன் இதழாகிய உணர்வு செலுத் தப்படுகிறது. அவ்வுணர்வில் தட்டுப்படுகின்ற சுவையைக் கவிச்சுவையாக உருவகிக்கிருர்.
யாருக்கும் தெரியாமல் விரைவாக நடந்துவிடு கிறது ஒரு முத்தம். அதைக் கவிஞர் குறிப்பிடு கிருர்:

"மான் வந்தாற்போல் வந்து வாய்முத்தம் தந்து விட்டுப்போய்விட்டாள் வீட்டுக்குள் பூங் கோதை" மருண்டவிழியோடு அவள் தோன்று வதைக் குறிக்க மான் வந்தாற்போல என்ருர்.

பிரிந்த தலைவி தலைவன் சந்திக்கிருர்கள். அவர் களைச் சாக்காடும் நிழல்போல் தொடர்கிறது. அவன் முகத்தை அவள் அணைக்கிருள். முத்தம் பெறுகிருள். முத்தத்தின் முடிவில் தன் கையில் தாங்கியுள்ள அவன் முகத்தைப் பார்க்கிருள். ஆனுல் அவனுடைய உடலைக்காணவில்லை.

"கடிதோடினுள் அத்தான் என்று அழைத்தே! நேர்ந்தோடும் இருமுகமும் நெருங்கும்போது நெடுமரத்தின் மறைவினின்று நீள் வாள் ஒன்று பாய்ந்ததுமேல்! அவன் முகத்தை அணைத்தாள் தாவி! பளீரென்று முத்தமொன்று பெற்ருள்.! சேயின், சாந்தமுகந்தனைக் கண்டாள். உடலைக் காணுள்! தலைசுமந்த கையோடு நிலத்தில் சாய்ந் தாள். தீந்தமிழர் உயர்விஞுக்குச் செத்தான். அன் பன் செத்ததற்குச் செத்தாள் அத்தென்னுட் டன்னம்." இதோடு ஐந்து முத்தங்கள் மொத்தம்.

—ப. முத்தையா

முல்லை

கடு மழை பெய்து கொண்டிருக்கிறது. வானம் முழுதும் இருண்டு கிடக்கிறது. செடி கொடி மரங்கள் நிறைந்து, எங்கு பார்த்தாலும் பசுமைக் காட்சியை வழங்கிநிற்கும் முல்லை நிலம், இம் மழையினுல் இன்னும் பசுமையாய்த் திகழ்ந்தது. வானத்திலிருந்து பொழியும் மழைத் துளிகள் காட்டாறுகளில் விழுந்து, முத்துக் களாய் மாறிவிடுகின்றனவோ என்று எண்ணும் படியாக முல்லை மலர்கள் முகிழ்த்திருந்தன.

இத்தகைய இயற்கைக் காட்சிகளை அரணு கக் கொண்டு விளங்கிய ஒரு சிற்றூரில் ஆயர் பாடியும் சேரியும் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுக்கு ஒரு பக்கமாகத் தள்ளிப் பெரிய மரங்கள் நெருங்கி அடர்ந்துள்ள ஓரிடத்தில் ஏழு நிலைகளையுடைய மாடமாளிகை யொன்று முல்லைக் கொடிகள் முன் புறம் பந்தரிட்டது போல் பிணைந்து படர்ந்து எழிலுடன் விளங்கிக் கொண்டிருந்தது. அதன்மேல் உப்பரிகையில் படுக்கை யறையில் அழகிய பெண்மணி ஒருத்தி பஞ்சணைமீது படுத்திருந்தாள்.

கணவன் பிரிவை நினைந்து துயரத்தில் தோய்ந் திருந்த அவள் கூடல் வாய்களில் அருவிபோல் ஒழுகும் மழைநீரின் பலவிதமான ஓசைகளைக் கேட்டுத்திடுக்கிட்டு, நிமிர்ந்து வெளியே பார்க்க லானுள். ஆகாயத்தில் நடக்கும் அமளி சாளரத் தின் வழியாக அவளுக்குக் கட்புலனுயிற்று. மேகங்கள் வானத்தில் விரைந்து சென்றவாறு

மழை பொழிவதையும், இடையிடையே மின்னல் கண்ணைப்பறிப்பதுபோல் மின்னுவதையும் கண்டு அவள் நடுநடுங்கலானாள். வானம் பொழியும் மழை நீர்த்துளிகளுடன் போட்டி போடுவது போல் அவளுடைய நீலோற்பலக்கண்களிலிருந்து நீர் துளித்துளியாய்ச் சிந்தலாயிற்று. இதுகரிய கூந்தற்சுமையிலிருந்து முல்லை மலர்கள் உதிர்வது போலிருந்தது.

தங்கள் தலைவி காதலன் பிரிவாற்றாது வருந்தி வருவதைக்கண்டு மனங்கவன்ற செவிலித்தாயும் தோழிகளும் எவ்வாறு, என்னகூறி அவளைத் தேற்றுவது என்று அறியாமல் திகைத்திருக்கின்றனர்.

அரசமாதேவி தனக்குள் முணுமுணுக்கலானாள்:- "கார்காலம் தொடங்குவதற்கு முன்வந்து விடுவதாகச் சொல்லிச் சென்றாரே! இன்னும் வரவில்லையே! ஒருவேளை போர்க்களத்தில் ...." ஒருபுறத்தில் எரிந்து கொண்டிருந்த பாவை விளக்கைத்தூண்டிவிட்டிருந்தவாறு இருந்த உயிர் தோழி இதைக்கேட்டு, "தலைவர் கூடிய சீக்கிரம் வாகைமாலை சூடிக்கொண்டு வந்து விடுவார், அம்மா! வீர புருஷராகிய அவர் முன் யார் எதிர்த்து நிற்கமுடியும்? பகைவர்களெல்லாம் ஆடிக்காற்றில் பட்ட பஞ்சுபோல் ஆயிருப்பர் என்பதில் சந்தேகமில்லை........தேவி" என்று நயமாகக்கூறித் தேற்றமுயன்றாள்.

செவிலித்தாய் இதுதான் சமயமென்று அருகு அணைந்து பரிவாக முகத்தைத் தடவிக்கொடுத்தவாறு, 'ஆமாம் குழந்தாய் நாங்கள் நகரத்தின் பக்கத்தில் போய், நாழியில் எடுத்துக்கொண்டு

போனநெல்லையும் அரும்பு அவிழக்கூடிய முல்லை மலரையும் ஓரிடத்தில்தூவி, இறைவனை வணங்கி நற்சொல் ஏதேனும் கேட்கிறதா, என உற்றுக் கேட்டுநின்றோம். பக்கத்திருந்த ஒருமாட்டுக் கொட்டிலில் குளிர் தாங்காது கைகளால் தோள் களை இறுகப் பிணித்திருந்த ஒரு இடைப்பெண் சுற்றிச்சுற்றியும், துள்ளிக்குதித்தும் வரும் கன்றுக் குட்டிகளைப்பார்த்து உங்கள் தாய்மார்கள் இடையர்களுடன் திரும்பிவரும் சமயம் தான். இப்போதே வந்துவிடுவார்கள் என்று கூறிக் கொண்டிருந்தாள். ஆகவே நல்லோர் சொல்லும் இந்நன்மொழி நம் தலைவர் பகைவரைவென்று அவர்கள் தரும் திறைகளைக்கொண்டு கூடிய சீக்கிரம் திரும்பிவருவார் என்பதை முன்கூட்டி அறிவிப்பதாகும். ஆதலால், நீ வீணுகவருந்தி உடம்பைக் கெடுத்துக்கொள்ளாது மனந்தேறி யிருப்பாயாக'' என்று கூறினுள்.

அரசமாதேவியின் காதுகளில் இத்தேற்றுமொழி களெல்லாம் சிறிதும் விழவில்லை. அவள் கண் களிலிருந்து பெருகும் நீர் நிற்கவுமில்லை.

2

தலையாலங்கானம் ஓர் அகன்ற நீண்ட காடு. இங்குதான் பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன், சோழன் என்ற இருபெரு வேந்தர்களை யும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகிய ஐம்பெரு வேளிர் களையும் படையெடுத்துப்போர் செய்துகொண் டிருந்தான். போர்க்களத்தை யடுத்துச் சிறிது பின்தள்ளி ஒரு பாதுகாப்பான இடத்தில் பாண் டியன் பாடிவீடு அமைத்திருந்தான். தானும்

தன் படைத்தலைவர்களும் வீரர்களும் தங்கியிருப்பதற்கு அவன் அமைத்திருந்த பாசறைகளே ஒரு சிற்றூர்போல் தோற்றமளித்தன. முள்ளிலான மதில் அரணுக்குள் படைவீரர்கள் தங்கியுள்ள (பசுமையான இலைகளால் வேயப்பட்ட) கூரை வீடுகளுக்கும், படைத் தலைவர்கள் தங்கியிருந்த (வட்டமாகச் சிறு சிறு கால்கள் நட்டு அவற்றில் கயிறுகளை வலித்துக்கட்டி மேலே படாம் விரிக்கப்பட்ட) கூடாரங்களுக்கும் நடுவே பாண்டியனின் படாம் மாளிகை உயர்ந்து மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது. யவனர்களால் பல வசதிகளுடன் புலிச்சங்கிலி விட்டு மிக அழகாக அமைக்கப்பட்ட அம்மாளிகையைச் சுற்றி நீண்ட குத்துக் கோல்கள் நட்டுப் பல வண்ணத் திரைகளால் உயரமான மதில் வளைக்கப்பட்டிருந்தது. முள் மதில் முற்றத்திலேயே யானைகள் காவல் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், முறையே படைவீரர்களும், படைத் தலைவர்களும் சூழ்ந்து பாதுகாப்பாக இருப்பது போதாதென்று, இங்கும் மன்னன் படாம் மாளிகையைச் சுற்றி மெய்க்காப்பாளர்கள் காவல் காத்திருந்தனர். நாழிகை வட்டில் வைத்து அவ்வப்போது அரசனுக்கு நாழிகை அறிவித்துக் கொண்டிருந்தவர்களுடன், பெரிய திரிகள் போட்டிருப்பதனால் மிகப் பிரகாசமாக எரியும் விளக்குகளுக்கு அடிக்கடி எண்ணெய் ஊற்றிச் சுடரைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்த பணிப் பெண்களும் மார்புக் கச்சத்தில் வாளைச் செருகியிருந்தனர்.

பள்ளி யறையில் வலிய கயிற்றால் கட்டிய திரைகள் அமைக்கப்பட்ட வெளி அறையில் சட்டை தரித்த ஊமை மிலேச்சர் சிலர் சுற்றிச் சுற்றிக்

காவல்புரிந்து கொண்டிருந்தனர். உள்ளறையில் நெடுஞ் செழியன் பள்ளிகொண்டிருந்தான் அங்கே மணிவிளக்கு ஒன்று ஒளிர்ந்துகொண்டிருந்தது. அவன் வலக்கரத்தைப் படுக்கையின் மேல் ஊன்றி இடது கையைத் தலையின்கீழ் வைத்தவாறு, அன்று போர்க்களத்தில் தனக்கு ஏற்பட்ட வெற்றியை நினைத்து ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்தான். இச் சந்தோஷ நிலையிலும் அவன் உள்ளம் இடையே ஒருநாள் பகைவர் படையின் எதிர்ப்புக்கு ஆற்றாது தம் படை சிதறியோடியதையும், யானை குதிரைகள் புண் பட்டதையும் செஞ்சோற்றுக் கடன் கழித்து இறந்தொழிந்த வீரர்களையும் நினைந்து வருந்தியது. இன்றுதானே படையை நடத்திச்சென்று, தனது வீர பராக்கிரமத்தைக் காட்டிப் போர் புரிந்து, பகைவர்களைப் படுதோல்வி யடையச் செய்ததை நினைந்து நினைந்து அவன் மனம் பூரித்தது. 'இனி நாம் ஊர் திரும்பலாம்; நாளை மாலை நம் காதலியைக் கண்டு அளவளாவலாம்' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். இம்மன நிறைவுடனேயே, வெற்றி முரசம் முழங்கித் தாலாட்ட அவன் உறங்கிவிட்டான். வெண்மையான மேகங்கள் வானத்தில் பரந்து செல்கின்றன. எந்தக் கணமும் மழை பெய்யக் கூடும். முல்லைக் காட்டில் மணற்பாங்கான பாதையில் இருபுறங்களிலும் காசாஞ்செடிகள் அடர்ந்திருந்தன. இடையிடையே கொன்றை முதலிய மரங்கள் வளர்ந்திருந்தன. மழையினால் நன்றாய்ச் சிவப்பேறியிருக்கும் செம்மண் பாதை இருமருங்கும் காசாஞ் செடிகளின் நீலமலர்கள் பூத்திருப்பதும், உள்ளங்கைகள்போல் காந்தள் மலர் விரிந்திருப்பதும், தோன்றிப் பூக்கள் இரத்

தம்போல் சிவந்திருப்பதும் கொன்றை மலர்கள் பொன்மலர்போல் சொரிந்திருப்பதும் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது. இவற்றை யடுத்து வரகங்கொல்லைகள் கதிர்சாய்த்திருந்தன. இடை வெளிகளில் வள்ளிக் காய்கள் முற்றிக் கிடந்தன. கலைமான்கள் பெண்மான்களுடன் மகிழ்ச்சியாய்த் துள்ளி விளையாடிக்கொண் டிருந்தன.

இவ்விதம் இயற்கைத்தேவி ஆட்சிபுரிந்துகொண் டிருந்த கானகத்தின் அமைதியை, ஊது கொம்பு ஓசையும் சங்கொலியும் குதிரைகளின் காலடி களும் கெடுத்துவிடுகின்றன. நெடுஞ்செழியன் தனது படைகளுடன் தலையாலங்கானத்திலிருந்து தன்னூர் திரும்புகிறான். முதலில் குதிரைமீது ஏறிவரும் படை வீரர்கள் சிலர் ஊதுகொம்பு ஊதி வருகின்றனர். அடுத்தபடியாகச் சிலர் சங்குகளை முழங்கிவருகின்றவர்களுக்குப் பின்னே வெற்றிக் கொடிகளை உயர்த்திவருகின்றனர். கடைசியாகப்பெரும்படை வீரர்கள் சேனாதிபதி கள் புடைசூழ நெடுஞ்செழியன் வாகைமாலை சூடியவாறு தேர்மீது கம்பீரமாக வீற்றுவருகி றான். குதிரைகள் காற்றினும் கடிய வேகத்தில் ஓடுகின்றன. அரசனின் தேரும் மிக வேகமாகச் செலுத்தப்படுகிறது. இவைகள் எல்லாவற்றினும் வேகமாக நெடுஞ்செழியன் மனம் அரசமாதேவி யை நோக்கி சென்றது.

அந்திமாலை ஆகாயத்தை அழகு செய்து கொண்டிருந்தது. மழை சிறு தூறலாகத் துளித் துக்கொண்டிருந்தது. அரசமா தேவி இப் போதும் மலரணையில் படுத்துக்கொண்டுதான் இருந்தாள்; அவள் தன் அருகில் காதலன் இருப்

பதாக நினைந்து கைகளால் தடவிப் பார்க்கிருள். அடுத்தகணம் அவளுக்கு ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. அவளுடைய ஏமாற்றம் பெருமூச்சாக வெளிப்படுகிறது. அவள் அடிக்கடி தலையைத் தூக்கி வெளியே நோக்குகிருள். மீண்டும் படுக்கையில் தொப்பென விழுகிருள். தலையணையில் முகத்தைப் பொத்திக்கொண்டு குமுறுகிருள்.

"அம்மா, வாழ்க்கையில் சில சமயங்களில் அரசர் வெளியே பிரிந்து செல்லவேண்டித்தான் இருக்கும், அவர் எப்போதும் நம் பக்கத்தில் இருக்க முடியுமா? சாதாரண மனிதர்களுக்கே வெளியே சென்று பார்க்கக் கூடிய வேலைகள் எத்தனையோ இருக்கின்றன. நம் அரசருக்குள்ள மகத்தான பொறுப்புகள் உனக்குத் தெரியாததா? பகையரசர்களைப் போரில் முறியடித்துவிட்டு வரச் சென்றவரைக் குறித்த நாளில் வரவில்லையென்று குறை கூறலாமா? அவர் கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். நீ வேண்டுமானுல் பாரேன்" என்று செவிலித்தாய் கூறித் தேற்றமுயல்கிருள்.

இதனுல் அரசமாதேவிக்கு ஆறுதல் உண்டாயிற்று போலும்! கழன்ருேடும் வளைகளைக் கைகளில் சரியாகத் தள்ளிவிட்டுக் கொள்ளுகிருள். ஆனுல், அடுத்தகணம் கணவன் பிரிவை நினைத்துக்கொண்டு அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இவ்விதம் வருந்துகிறவளை எவ்விதம் தேற்றுவதென்று தெரியாமல் எல்லோரும் திகைக்கின்றனர்.

இச்சமயத்தில் ஊது கொம்பு ஓசையும், சங்கொலியும், குதிரைகளின் காலடிகளும், தேர்ச்

சக்கரம் உருளும் சப்தமும் தூரத்தில் கேட்கின்றன. அரசமாதேவி திடுக்கிட்டு எழுந்து சப்தம் வருந்திசையை நோக்கி உற்றுக்கேட்கிருள். மேற்குறித்த சப்தங்கள் வரவர மிகச் சமீபமாகக் கேட்கலாயின. கடைசியாக மாளிகை முன் தேர் உருண்டு வந்து நின்ற சப்தமும், குதிரைகள் கனைத்து ஒலித்த ஆரவாரமும் அரசியின் காதுகளை நிரப்புகின்றன.

இதே சமயத்தில், தோழிகள் சிலர் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஓடோடி வந்து, "தேவி, மன்னர் வந்துவிட்டார்; வெற்றிமாலையுடன் வந்திருக்கிருர்'' என்று கூறி வணங்கினர்.

"வந்து விட்டாரரா! அரசரா?'' என்றி துடி துடிப்புடன் கேட்டவாறு அரசமா தேவி படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்தாள். ''காஞ்சனை கண்ணுடியைக்கொண்டுவா'' என்றுகூறியவாறு தன் ஆடையணிகளைச் சீர்திருத்திக் கொண்டு கூந்தலைக் கோதி முடித்து, நெற்றியில் திலகம் சரியாய் இருக்கிறதா என்று பார்த்து ஒப்பனை செய்துகொண்டு, தன் கணவனை எதிர்கொண்டு அழைக்க விரைந்து நடந்தாள். செவிலித்தாயும் உயிர்த்தோழி முதலியவர்களும் அவள் பின்னே ஓடலாயினர்.

— நாரண துரைக்கண்ணன்

ஸ்டார் பிரசுரம்

★

தமிழ் இலக்கிய ரஸிகர்கட்கு எங்கள் புதிய வெளியீடுகள்:

1	ரஸிகமணி டி. கே. சி. (தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் M. A.)	2 8 0
2	கவிதை, கலை, விமர்சனம் (சுப. நாராயணன்)	2 0 0
3	நியாயமா? (லட்சியக்கதை) (கால்ஸ்வொர்த்தி)	1 8 0
4	குமரியின் சபதம் (எம். எல். சபரிராஜன்)	1 0 0
5	விஜயன் [ரா. அ. பத்மநாபன்)	0 12 0
6	மேரி மக்தலேனா (ச. து. சு. யோகியார்)	0 10 0

Star Publications ★ Palakkarai Trichy

Printed at the Kumaran, Karaikudi P. I. C. R. No 31 C. 1000
For Kamala Prachuralayam Madras P I C Q No 197.

KR. இராமசாமியின்

கிருஷ்ண கான சபா

★

புதிய நாடகங்களை

எதிர்பாருங்கள்

★

உடுமலை நாராயணக்கவி, உபாத்தியாயர் பொன்னுச்சாமிபிள்ளை, ஓவியர் மாதவன், நடிகமணிகளான, டி. வி. நாராயணசாமி, டி. கே. சம்பங்கி, கே. டி. சந்தானம் முதலியவர்களின் கூட்டுறவுடன் கூடியது

★

பி. வி. எத்திராஜ்
நிர்வாகி

கவியரசர் பாரதிதாசன் நூல்கள்!

— விரைவில் வருபவை —

1. அமைதி
2. காதல் நினைவுகள்
3. இருண்ட வீடு
4. இரணியன்
5. கொய்யாக்கனிகள்
6. ஏழை உழவன்

முல்லைப் பதிப்பகம்

சென்னை — மதுரை

Cover Page Printed at The Great Dravidian Press, 2-269, Thambu Chetty Street
G. T., Madras

Cibol

REGISTERED

சைபால்

சொரி, சிரங்கு, வேனல் கட்டி
முகப்பரு, சேத்துப்புண், காப்பான்
தீப்பட்ட புண், முதலியவைகளுக்கு கைகண்ட
மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

Manufactured by:
The South Indian Mfg. Co.,
Madura.

— Design by M.A.Ushari & Son. Madura —

குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தையும்
புஷ்டியையும் தருவது " சிமோகிரைப் "